# யாப்பு

වාසුදේව නානායක්කාර
ලේකම්
ප්‍රජාතන්ත්‍රවාදී වාමාංශික පෙරමුණ
අංක 49, 1/1, විනයාලංකාර මාවත,
කොළඹ - 10

25/12/24

09 JAN 202

## ஜனநாயக இடதுசாரி முன்னணி

49,1/1, வினயாலங்கார வீதி, கொழும்பு- 10
☎ 011-2684820 📠 011-2677314

# ஜனநாயக இடதுசாரி முன்னணி யாப்பு (வரைபு)

## 1. பெயர்

கட்சியின் பெயர் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகும். சிங்களத்தில் அது "ப்ரஜாதன்தரவாதீ வாமங்சிக்க பெரமுன" என்றும் ஆங்கிலத்தில் Democratic Left Front என்றும் அழைக்கப்படும்.

## 2. பிரதான அலுவலகமும் விலாசமும்

கட்சியின் பிரதான அலுவலகம், கொழும்பு -10, விநயாலங்கார மாவத்தை இலக்கம் 49இல் அமைந்த இடத்தில் அல்லது கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானிக்கும் ஓரிடத்தில் அமையும்.

## 3. குறிக்கோள்

3.1 நுகர்வு மற்றும் வளங்கள் பற்றிய பேராசை இன்றி, அவற்றைப் பகிர்ந்து கொண்டு ஒருவரை ஒருவர் பேணிப்பாதுகாத்து வாழும், கலாசாரத்தைக் கொண்ட ஒரு சமூக முறைமையைக் கட்டியெழுப்புதல்.

3.2 இத்தகைய சமூகத்தில் பின்வரும் பண்புகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

- மனித உழைப்புச்சக்தியால் உற்பத்திசெய்யப்படும் பண்டங்களுக்கு /சேவைகளுக்குக் கிடைக்கும் பெறுமதியை மற்றுமோர் மூலதனத்தின் அதிகாரத்தால் பறிப்பது மூலம் உருவாக்கப்படும் நியாயமற்ற இலாபத்திற்கு வாய்ப்பை வழங்காத – முதலாளித்துவத்திற்கு அப்பாற்பட்ட சோசலிச சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.

- காலத்திற்கு ஏற்ப அனைவரது அவசியங்களையும் பூர்த்தி செய்யக் கூடியதொரு நிலைமை.

- அனைவரும் சம உரிமைகளை அனுபவிக்கக்கூடியதொரு நிலைமை

- அனைத்து நபர்களும் முழுமையான வளர்ச்சியை பெறக்கூடிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்தல்

- சமூகத்தின் பொது நடவடிக்கைகளை அமுலாக்கக் கூடியவாறும் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவாறும் அனைவரும் பங்குபற்றக் கூடியதொரு நிலைமை.

- இதுவரை இடம்பெறாத தனிநபர் சுதந்திரத்தை பிரஜைகள் அனுபவிக்கக் கூடியதொரு நிலைமை

- அனைத்து மனிதர்களினதும் சிருஷ்டிக்கும் ஆற்றலை வெளிப்படுத்தக்கூடியதொரு நிலைமை

- நுகர்வு வாதத்திற்கும் புலன் ஆசைகளுக்கும் அப்பாற்பட்ட ஆத்மீகத் திருப்தியைப் பெறும் வகையிலான மார்க்கங்களை ஏற்படுத்துதல்.

- நிலைபேறான அபிவிருத்தி மூலம் மனிதனுக்கும் சூழலுக்கும் இடையே பரஸ்பர உறவை உறுதி செய்தல்.

3.3 இனம், மதம், சாதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பிளவுபடுவதற்குப் பதிலாக, சகல மனிதர்களும் தமது அடையாளத்தைப் பேணும் அதேவேளை சகவாழ்வின் அடிப்படையிலும் ஒத்துழைப்பின் அடிப்படையிலும் வாழக்கூடிய ஓர் கூட்டு வாழ்க்கை முறையை அனுசரித்து வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குதல், இதன் பொருட்டு சிங்களம், தமிழ், முஸ்லீம் இனங்களுக்கு மத்தியிலும் ஏனைய சமூகங்கள் மத்தியிலும் சமத்துவத்தை உருவாக்குதல், இதற்கு மேலதிகமாக பெரும்பான்மை சிங்களப் பிரதேசங்களில் சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை தமிழ் - முஸ்லீம் மக்களுக்கு வழங்க வேண்டிய அதே சமயம் பெரும்பான்மை தமிழ் - முஸ்லீம் பிரதேசங்களில் பரஸ்பரம் ஏனையோரும் அனுபவிக்கக் கூடியவாறு சுயாட்சியை நிறுவுதல்.

3.4 நாட்டின் சகல வளங்களையும் உச்ச மட்டத்தில் சமூகத்தினதும் சகல மக்களினதும் நலனுக்குப்பயன்படுத்தக் கூடியவாறு நாட்டின் அரசியல் பொருளாதாரத்தை உருவாக்குதல். மேற்படி பொருளாதாரத்தின் பயனுறுதியை சகல மக்கள் பிரிவினரும் நியாயமான முறையில் பகிர்ந்து பெறக்கூடிய முறையை மேம்படுத்தல்.

3.5 மேற்குறித்த குறிக்கோளை அடையும் முகமாக சோசலிச ஜனநாயக கருத்துக்களைக் கொண்ட சகல முற்போக்கு சக்திகளையும் ஐக்கியப்படுத்தி ஓர் அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்புதல் அதற்கான சமூக அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுதல்.

3.6 மேற் கூறப்பட்ட குறிக்கோள்களை அடையும் முகமான அரசியல் போராட்டங்கள், தேர்தல் களங்கள் என்பவற்றில் மக்கள் செயற்பாட்டை உருவாக்குதல் உட்பட்ட சகல ஜனநாயக நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்

3.7 சகல நீதியைப் பெறக்கூடிய, சகல மக்கள் பிரிவுகளையும் பேணிப்பாதுகாக்கக் கூடிய, பல்வேறு சமூகப்பிரிவுகளின் கலாசாரப் பண்புகளைப் பேணுவதோடு பரஸ்பரத்துடன் சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடிய சமூக முறைமையைக் கட்டியெழுப்புதல்.

## 4.0 அங்கத்துவம்

கட்சியின் நோக்கங்களுக்கும் கட்சியின் யாப்பிற்கும் உடன்படும் எந்தவொரு நபரும் கட்சியில் சேர்வதற்கு கட்சி அங்கீகரித்த அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தை நிரப்பிய பின்னர் நிறைவேற்றுச்சபையின் அங்கீகாரம் கிடைத்தும் அங்கத்துவம் வழங்கப்படும்.

## 5.0 அங்கத்துவ சந்தா

அங்கத்துவம் பெறும் அனைவரும் ஆண்டு தோறும் அல்லது மாதம் தோறும் கட்சியின் அங்கத்துவ சந்தாக்கட்டணத்தைச் செலுத்த வேண்டும். மத்திய செயற்குழுவின் தீர்மானங்களுக்கு அமைய அங்கத்தவர்கள் செலுத்த வேண்டிய சந்தாப்பணம் அவரவரின் வருமானத்திற்கு அமைய செலுத்தப்பட வேண்டும். எனினும், வருமானம் அற்றவராயின் குறைந்த ஆண்டுச் சந்தாவாக ஆண்டொன்றிற்கு 240/= ரூபா (மாதமொன்றிற்கு 20/= ரூபா) செலுத்த வேண்டும். மேற்படி சந்தாவை அங்கத்தவரிடம் அறவிடுவதற்கு எத்தகைய ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கும் நிறைவேற்றுச்சபைக்கு அங்கீகாரம் அளிக்க முடியும். செலுத்தப்படும் சந்தாப்பணத்திற்கு உடனடியாக பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

## 6.0 பொது மாநாடு

6.1 கட்சியின் முக்கிய சபை பேராளர் மாநாடாகும். மேற்படி மாநாடு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வேண்டும். மொத்த அங்கத்தவர்களில் 1/3 பகுதியினரின் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் விசேட மாநாடு கூட்டப்படும்.

6.2 கட்சியின் மாநாடு செயற்பாடுள்ள உறுப்பினர்களின் பேராளர் மாநாடாக அமைய வேண்டும். மத்திய செயற்குழுவின் பிரமாணங்களுக்கு அமைய செயற்பாடு தீர்மானிக்கப்படும். மேற்படி உறுப்பினர்களின் 1/3 பகுதி மாநாட்டின் நிறைவெண் ஆகும்.

6.3 கட்சியின் மாநாட்டைக் கூட்டும் பொறுப்பு பதவியிலுள்ள மத்திய செயற்குழுவைச் சாரும்.

6.4 மாநாடு கூடியவுடன் ஆரம்பத்திலேயே மாநாட்டை — நெறிப்படுத்துவதற்கு தலைமைக்குழுவையும் அனைத்துக் கலந்துரையாடல்களையும் தீர்மானங்களையும் அறிக்கையிடுவதற்கு

செயலாளர் குழுவொன்றையும் பெயர் குறித்து மாநாட்டின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். கட்சி மாநாட்டிற்கு வருகை தரும் சகல உறுப்பினர்களினதும் பொது வசதிகளைக் கவனிப்பது மாநாட்டைக் ஒழுங்கமைக்கும் மத்திய குழுவினதும் நிறைவேற்றுக் குழுவினதும் பொறுப்பாகும்.

6.5 மாநாட்டில் பங்கு பற்றுவதற்குத் தகைமை பெறும் அனைத்து உறுப்பினர்களும் மாநாடு நடைபெறும் நாளுக்கு முதல் நாள் வரை அங்கத்துவச் சந்தாவைச் செலுத்தி அங்கத்துவ உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும். இது தொடர்பான இறுதித் தீர்மானம் மத்தியசெயற் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

## 7.0 மத்திய செயற்குழு

குற்றைந்தபட்சம மூனறு மாதததிறகு ஒரு தடவை மததிய செயறகுழு கூட்ட வேண்டும். அவ்வாறு கூடாவிட்டால் மத்திய செயற்குழு அங்கத்தவர்களில் 1/3 பகுதியினரின் வேண்டுகோளுக்கு அமைய மத்திய செயற்குழு கூட்டப்பட வேண்டும்.

7.1 மாநாட்டின் இரகசிய வாக்கெடுப்பு மூலம் மத்திய செயற்குழு நியமனம் பெற வேண்டும். இதற்கான வாக்குரிமை மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட செயற்பாடு கொண்ட உறுப்பினர்களுக்கு மாத்திரமே உண்டு.

7.2 மத்திய செயற்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை விகிதாசாரப்படி மாநாடு தீர்மானிக்கும் எண்ணிக்கையில் உள்ளடங்கும். மாவட்டச் செயலாளர்கள் உத்தியோக பூர்வமாக மத்திய செயற்குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்படுவர். ஆனால், உத்தியோக பூர்வமாகத் தெரிவு செய்யப்படுவோருக்கு மத்திய செயற்குழு அங்கத்தவர்களின் வாக்குரிமை கிடையாது.

7.3 மத்திய செயற்குழுவின் அங்கத்தவர்களாக உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்யப்படும் மாவட்டச் செயலாளர்கள் பற்றிய மேலதிகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மத்திய செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

7.4 மத்திய செயற்குழுவில் வெற்றிடங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மத்திய செயற்குழுவில் போட்டியிடுவதற்கு பெயர்குறிக்கப்பட்ட, பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் நியமனம் பெற்ற பின்னர், பட்டியலில் எஞ்சியிருப்போரின் ஒழுங்கு வரிசைப்படி மத்திய செயற்குழுவின் வெற்றிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்வாறாக நியமனம் பெறுவதற்கு

பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத பட்சத்தில் மத்திய செயற்குழுவி பெரும்பான்மை வாக்குகள் மூலம் ஒரு தோழர் அல்லது தோழிய நியமனம் பெறுவார்.

7.5 கட்சியின் மாநாடு நடந்து முடிந்ததும், புதிதாக நியமனம் பெற்ற மத்தி செயற்குழு கூடி செயலாளரை தேர்ந்தெடுக்கும். கட்சிச் செயலா அரசியல் அதிகாரம் கொண்ட அரசியல் கோட்பாட்டு மட்டத்தி வழிகாட்டியாகவும் செயற்படுவார். அவர் மத்திய செயற்குழுவி ஆலோசனைகளுக்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்ப அரசிய தீர்மானங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத பின்னர் இடம் பெறும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஏனை பதவிகளுக்கும் சபைகளுக்கும் தகுதியான நபர்கள் மத்தி செயற்குழுவினால் தெரிவு செய்யப்படுவர்.

## 8.0 கட்சியின் ஸ்தாபனக் கட்டமைப்பு

1. தலைவர் 1 உபதலைவர் 1

2 செயலாளர் 1 பிரதிச் செயலாளர் 1 உதவிச் செயலாளர் 1

3. அமைப்புச் செயலாளர் (தேசிய அமைப்பாளர்) 1 உதவி அமைப்பு செயலாளர் 1

4. தொழில் உறவுச் சபைச் செயலாளர் 1 தொழில் உறவுச்சபை உதவிச்செயலாளர் 1

5. கல்விச் சபைச் செயலாளர் 1 கல்விச் சபை உதவிச் செயலாளர் 1

6. நிதிச் சபைப் பொருளாளர் 1 நிதிச் சபை உதவிப் பொருளாளர் 1

7. தேசிய ஒருங்கிணைப்புச் சபை செயலாளர் 1 தேசிய ஒருங்கிணைப்பு சபை உதவிச் செயலளார் 1

8. ஊடகச் செயலாளர் 1

9. வெகுஜன சபைச் செயலாளர் 1 வெகுஜன சபை உதவிச் செயலாளர் கலாசாரச் செயலாளர் 1

10. இளைஞர் சங்கச் சபை
இளைஞர் செயலாளர் 1
மாதர் செயலாளர் 1
மாணவச் செயலாளர் 1
இளைஞர் விவகார உதவிச் செயலாளர் 1

மாதர் உதவிச் செயலாளர் 1
மாணவ உதவிச் செயலாளர் 1

## 9.0 நிறைவேற்றுச் சபை

மாநாட்டின் பின்னர் இடம்பெறும் இரண்டாவது மத்திய செயற்குழுவில் அங்கம் வகிப்போர் மத்தியில் இருந்து அரசியல் முதிர்ச்சியுடைய-நாட்டில் ஏற்படும் மாற்றங்களைப பற்றிய நடைமுறை அறிவும் விளக்கமும் கொண்ட தோழர்கள் தோழியர்கள் மத்திய செயற்குழு நிறைவேற்றுச் சபைக்குத் தெரிவு செய்யும். இவ்வாறு தெரிவு செய்யும் போது தலைவர், செயலாளர், அமைப்புச் செயலாளர், தொழில் உறவுச் செயலாளர், நிதிச் செயலாளர் (பொருளாளர்), கல்விச் செயலாளர், தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளர், இளைஞர் விவகார செயலாளர் வெகுஜனச் செயலாளர் கலாசாரச் செயலாளர், ஊடகச் செயலாளர், மாதர் யெலாளர், என்போரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிறைவேற்றுச் சபைக்கான 12 பேருக்கு மேலதிகமாக மேலும் 3 பேர் உட்பட 15 பேர் தெரிவு செய்யப்படுவர். இத்தெரிவுகளில் 60% வீதமான தெரிவு தொழிலாளர் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இது பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய செயற்குழுவைச்சாரும்.

9.1 செயலாளர்கள் சபைமுதல்வர்கள், வெகுஜனத் தலைவர்கள் என்போர் நிறைவேற்றுச் சபையில் உள்ளடங்குவர். கட்சியின் செயலாளர் நிறைவேற்றுச் சபையில் செயலாளராகவும் கடமை புரிவார். செயற்குழு மேற்கொள்ளும் முக்கிய தீர்மானங்களைச் செயற்படுத்துவது பற்றி மத்திய செயற்குழு ஆராய்ந்து பார்க்க வேண்டும். கட்சியோடு தொடர்புடைய சகல துறைகளுக்கும் இடையீடு செய்வதற்கு அமைப்புச் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

## 10. நம்பிக்கைப் பொறுப்பு

கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்புச் செயலாளர், தொழில் உறவுகள் செயலாளர் என்போர் கட்சியின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகச் செயற்படுவர். இந்நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்சியின் சகல சொத்துக்களுக்கும் வகைப்பொறுப்புக் கூறுதல் வேண்டும். இந்நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மத்திய செயற்குழுவிற்கும் கட்சி மாநாட்டிற்கும் வகைப் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

## 11. செயலாளர்

கட்சி அங்கத்தவர்களின் அங்கத்துவப்பட்டியல் உட்பட அனைத்து ஆவணங்களையும் பராமரித்தல், கட்சிக்குரிய நடவடிக்கைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு, என்பன

செயலாளருடைய கடமையாகும். கட்சியின் சகல சபைகளைக் கூட்டுதல் அவற்றிற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். கட்சியின் மாநாட்டிற்கு அவசியமான ஆவணங்களைத் தயாரித்தல் என்பன செயலாளரின் பொறுப்புகளாகும். அவர் கோட்பாட்டு ரீதியிலும் அரசியல் ரீதியிலும் முதிர்ச்சி பெற்ற வழிகாட்டியாக செயற்பட வேண்டும்.

## 12. பொருளாளர்

கட்சியின் நிதி தொடர்பான பொறுப்புக்களும் நடவடிக்கைகளும் பொருளாளரைச் சார்ந்தது. அங்கத்துவ சந்தாவை ஒழுங்காகச் சேகரித்தல், கட்சிக்குத் தேவையான வேறு நிதிகளைத் திரட்டுதல் அவற்றை நிர்வகித்தல் என்பன பொருளாளரின் கடமையாகும். நிதிச் சபையின் செயலாளராகவே பொருளாளர் செயற்படுவார். மாதாந்த கணக்குகளை மத்திய செயற்குழுவிற்குச் சமர்ப்பித்தல் பொருளாளரின் பொறுப்பாகும். கட்சியின் கணக்குகள், நிதி என்பன பொருளாளர் உட்பட நிறைவேற்றுச் சபையின் மேலும் இருவரின் பொறுப்பில் இருக்கும்.

## 12.1 நிதி நிர்வாகம்

நிறைவேற்றுச் சபையின் தீர்மானங்களுக்கு அமைய பொருளாளர் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அமுலாக்குவார். கட்சிக்கு உரித்தான சகல நிதிகளும் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் பெயரில் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும். வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை மீளப் பெறல் பொருளாளர் உட்பட மேலும் ஒருவரின் கையொப்பத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். தேவைக்கருதி இந்நடவடிக்கைகளிலான மாற்றங்களை நிறைவேற்றுச்சபை மேற்கொள்ளும்.

## 13. ஒழுக்காற்று நடவடிக்கைகள்

ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஒழுக்காற்றுச் சபையைச் சார்ந்த பொறுப்பாகும். இச் சபை மாநாட்டிற்கு வகை பொறுப்புக் கூறுதல் வேண்டும். கட்சி அங்கத்தவர்கள் கட்சியின் ஒழுக்க நெறிமுறைகளை சகல மட்டங்களிலும் பேணிப்பாதுகாக்க வேண்டும். கட்சியின் கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் உடன்பட்டதாகவே அவை அமைய வேண்டும். தமது நடவடிக்கைகள் ஊடாக கட்சியின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துவது கடசியின் ஒழுக்க நெறிமுறைகளை மீறியதாகவே கருதப்படும். ஆனால், நியாயமான விசாரணை இன்றி எந்தவொரு அங்கத்தவரினதும் உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு கட்சி யாப்பு இடமளிக்காது. கட்சி மாநாடு மூலமே ஒழுக்காற்றுச் சபை நியமனம் பெற வேண்டும். ஒழுக்காற்று நடவடிக்கைகள் மத்திய செயற்குழுவின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படும்.

## 14. கட்சியின் பதாகை

கட்சியின் பதாகை – சிவப்புநிறப் பின்னணியில் மஞ்சள் நிறத்திலான சூரியகாந்திப் பூவினுள், பற்கள் கொண்ட சக்கரமும் நெற்கதிர்களினால் சூழப்பட்ட வட்டத்தின் மீது அரிவாளும் சுத்தியலும் உள்ளடக்கப்படும்.

## 15. கட்சிக்கீதம்

உழைக்கும் மக்களின் சர்வதேச கீதத்தின் அடிப்படையில் சிருஷ்டிக்கப்பட வேண்டும். ஏற்கனவே, அங்கீகரிக்கப்பட்டுள்ள கட்சிக்கீதம் கட்சியின் கீதமாகும்.

## 16. யாப்பிற்கான திருத்தங்கள்

யாப்பிற்கான திருத்தங்கள் மாநாட்டின் போது அங்கீகரிக்கப்பட வேண்டும் மத்திய செயற்குழுவும் மாநாட்டின் அணவல் அங்கீகாரத்தின் (covering approval) கீழ் அவசர தேவைகளின் நிமித்தம் சில திருத்தங்களை அங்கீகரிக்க முடியும்.

## 17. மரபொழுங்கு

சிங்களம், தமிழ், முஸ்லீம் ஆகிய சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும், பால்நிலை சமத்துவத்தின் அடிப்படையிலும், இளைஞர் யுவதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் கட்சியின் பல்வேறு சபைகளுக்கு நியமிக்கும் மரபொழுங்கு பரிணாமம் அடைதல் வேண்டும். செயலாளர் தலைவர்

**ஸ்டார் பப்லிகேசன்ஸ்**
இல. 47, ஜயன்த வீரசேகர மாவத்தை,
கொழும்பு - 10 தொலைபேசி: 0112 347477

திகதி: 2010 - 12- 20

விலை ரூபா 50/=